குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திருமதி. S.ஷர்மிளா., B.A.B.L.(HONS) L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17–ஆம் நாள் செவ்வாய்கிழமை

CMP No: 74/2026
in
Cr.No.158/2025
in
(தீவட்டிப்பட்டி காவல்நிலையம்)

திரு.நவீன்குமார் த/பெ.சசிக்குமார்,
கதவு எண்.144,
மாருதி என்கிளேவ்,
பிளாட் எண்.501, 5 வது தளம், 5 வது கிராஸ்,
அன்னசந்திரபாளையா,
விமானபுரா, பெங்களூர் வடக்கு,
கர்நாடகா 560017.

. ...மனுதாரர்

//எதிர்//

காவல் ஆய்வாளர்,
தீவட்டிப்பட்டி காவல் நிலையம்,
சேலம் மாவட்டம்.

குற்ற எண்.109/2025.

U/s.303(2) BNS 2023.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 06.02.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்வு.

மனுதாரர் பிரிவு BNSS 497ன் கீழ் ஓமலூர் காவல் நிலைய குற்ற வழக்கு

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.17 17:44:50 +0530

எண்.109/2025, சட்டப்பிரிவு.303(2) BNS 2023, படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கைப்பற்றப்பட்ட செத்தான KA 42 B 7620 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெறுவதற்கு மனு தாக்கல் செய்து அந்த மனு எண்.சிஎம்பி எண்.158/2025 ல் 19.05.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டது.

மேற்படி உத்தரவில் 2-ம் நிபந்தனையில் மனுதாரர் ரூ.50,000/-(ஐம்பதாயிரம்) பிணை பத்திரம் எழுதி தர வேண்டும். மேலும் அதே தொகைக்கு இரு தனிநபர் பிணைபத்திரம் எழுதி தரவேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர் என்றும், மனுதாரருக்கு எந்தவிதமான அசையும் மற்றும் அசையா சொத்துகள் எதுவும் இல்லை என்பதாலும், எனவே மனுதாரர் சொத்து குறித்து ஆவணம் ஏதும் இல்லை என்றும் கூறியுள்ளார். மேலும் மனுதாரர் தனது ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையின் நகலை நீதிமன்றத்தில் சமர்பிப்பதாக கூறியுள்ளார்.

இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில், Cr.M.P.No.158/2025 ல் உள்ள நிபத்தனைகளை பரிசீலித்ததிலும், மனுதாரர் இவ்வழக்கு சொத்தான KA 42 B 7620 என்ற வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெறுவதற்கு ரூபாய் 50,000/- பிணைபத்திரம் எழுதி தர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்கு சொத்து குறித்து ஆவணம் ஏதும் மனுதாரர் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபத்தனை இல்லை. எனவே மனுதாரர் மேற்படி தொகைக்கு பிணைபத்திரம் மற்றும் அதே தொகைக்கு இரு ஜமீன்தாரர்கள் கொடுத்தால் போதுமானதாகும், மேற்கூறிய காரணங்களுக்காக இந்த மனுவானது பகுதி அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் செவ்வாய்கிழமை 17-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.17 17:44:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.